# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • ஜூலை 14, 2018

Weekly E-paper • July 14, 2018


## அமித்ஷாவின் வருகை

# அபாயத்தின் வருகை!

• சுப.வீரபாண்டியன்



தமிழகம் நோக்கிய அமித்ஷாவின் வருகை அபாயத்தின் வருகை என்றே மக்கள் உணர்கின்றனர். அவர்களுக்கு இங்கே செல்வாக்கு இல்லை, வாக்குகளும் இல்லை, பிறகு ஏன் அவர்களைப் பார்த்து அஞ்சுகின்றீர்கள் என்று சிலர் கேட்கின்றனர்.

அவர்களுக்கு இங்கு வாக்குகள் இல்லை. ஆனால், மத்திய அரசின் ஆட்சியாளர்கள் என்னும் முறையில் அதிகாரம் இருக்கிறது. கோடி கோடியாய்ப் பணம் இருக்கிறது. எது குறித்தும் கவலை கொள்ளாமல், அரசியல் அறம் பற்றிய சிந்தனையே இல்லாமல், எதனையும் செய்து முடிக்கும் பழைய வரலாறு இருக்கிறது. இதற்கு மேல் என்ன வேண்டும்? அதனால்தான் தமிழகம் அஞ்சுகிறது.

கடந்த நான்காண்டு காலப் பா.ஜ.க. ஆட்சியில் அடித்துக் கொல்லப்பட்ட சிறுபான்மையினர், தலித்துகள், நீட்தேர்விற்குப் பலியான இரண்டு மாணவிகள் நம் கண்முன்னே நிற்கின்றனர். 1000, 500 ரூபாய்த் தாள்கள் செல்லாது என அறிவிக்கப்பட்ட பிறகு, மணிக்கணக்கில், வங்கிகளின் முன்னே கால் கடுக்க நின்ற நடுத்தட்டு மக்கள் ஒருபுறம், 9000 கோடி, 11,000 கோடி என்று வங்கிக் கடன் பெற்றவர்கள் நாட்டை விட்டே தப்பித்துச் சென்றது மறுபுறம். ஸ்பெயின் தேசத்திலோ, அமெரிக்காவின் ஓர்லாண்டோவிலோ விபத்து என்றால், அடித்துப் பதறி அறிக்கைவிடும் பிரதமர், தூத்துக்குடியில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காக வாய் கூடத் திறக்காத கொடுமை! இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்த நாட்டை இந்து நாடு என்ற பெயரில், பார்ப்பன நாடாக்கிவிடத் துடிக்கும் அவர்களின் பதற்றம் நம்மைத் திகைக்க வைக்கிறது. உ.பி.யிலோ, கர்நாடகத்திலோ தங்கள் கட்சியின் சார்பில் ஒரு இஸ்லாமியரைக் கூடத் தேர்தலில் நிறுத்தாத அந்தக் கட்சி, இன்று, இந்தியாவின் அதிசயம் என்று உலகெலாம் வியந்து பார்க்கும் தாஜ் மகால் தூசி படிந்த மண்டபமாக மாறுவதைக் கண்டு அமைதி காக்கிறது. உங்களால் பாதுகாக்க முடியாது என்றால், இடித்துவிடுங்கள் என்று நீதிமன்றம் சினம் கொண்டு பேசும் நிலை இன்று வந்துள்ளது.

தமிழகத்தில் கூட்டணி அமைத்துப் போராடுவோம் என்கின்றனர் அமித்ஷாவும், இல. கணேசனும். அவர்களோடு இங்கு யார் கூட்டணி அமைப்பார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. அதற்கெல்லாம் தக்க தரகர்கள் இங்கு உள்ளனர். 2014இல் கூட்டணி அமைந்ததில்லையா! இப்போதும் அந்தத் தரகுப் பணிகள் தொடங்கிவிட்டன.

மம்தா பானர்ஜியும், யெச்சூரியும் கூறியுள்ள சொற்கள் நம்பிக்கை அளிக்கின்றன. காங்கிரசுடனும், பிற கட்சிகளுடனும் கூட்டு சேரச் சம்மதம். பா.ஜ.க.வை எதிர்ப்பதே எங்கள் முதல் நோக்கம் என்று அவர்கள் கூறியுள்ளதை, தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வழிமொழிய வேண்டும்.

தமிழினத்தின் அடுத்த தலைமுறையைக் காப்பாற்ற வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது!

•

# லோக் ஆயுக்தா அட்டக் கத்தி!

**● வெற்றிச்செல்வன்**

கடந்த 09.07.2018 அன்று, தமிழக சட்டப் பேரவையில் லோக் ஆயுக்தா மசோதா தாக்கல் செய்யப்பட்டுச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

அரசு ஊழியர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் ஊழல் உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபட்டால், அவர்களை விசாரணை வரம்புக்குள் கொண்டுவருவதற்காக 2013ஆம் ஆண்டு, நடுவண் அரசு லோக்பால், லோக் ஆயுக்தா சட்டத்தை (The Lokpal and Lokayukta Act, 2013) நிறைவேற்றியது. 2014ஆம் ஆண்டு இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. நடைமுறைக்கு வந்த ஓராண்டுக்குள் அந்தந்த மாநில அரசுகள் தங்களது மாநிலத்தில் லோக் ஆயுக்தா சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்கிறது லோக்பால் சட்டம். எனினும் லோக் ஆயுக்தா சட்டத்தைக் கொண்டுவராமல் காலம் தாழ்த்திய அ.தி.மு.க. அரசு, கடந்த ஏப்ரல் மாதம் உச்சநீதிமன்றம் லோக் ஆயுக்தா சட்டம் கொண்டு வருவது குறித்த அறிக்கையினை ஜூலை 10க்குள் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவசர கதியில் இச்சட்டத்தை சட்டப்பேரவையில் தற்போது நிறைவேற்றியுள்ளது.



இவ்வமைப்பு அதிகாரமில்லாத ஓர் அமைப்பு என்று சொல்லப்படுவதற்கான காரணங்களை இங்கு ஆராயலாம்.

லோக் ஆயுக்தா அமைப்பு, தலைவர் உள்ளிட்ட நான்கு உறுப்பினர்களைக் கொண்டது. லோக் ஆயுக்தா அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் குழுவானது முதல்வர், சட்டப்பேரவைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைக் கொண்டது. இக்குழுவின் பெரும்பான்மை ஆளுங்கட்சியாக இருப்பதால் ஆளுங்கட்சியின் விருப்பப்படியே நியமனங்கள் நடைபெறும் என்பது வெளிப்படையான செய்தி.

> 1971 - 76 ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, "பொதுவாழ்வில் ஈடுபட்டோர் இலஞ்ச ஊழல் குற்றத் தடுப்பு சட்டம்", 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

நடுவண் அரசின் தெரிவுக் குழுவின் அமைப்பை நோக்கும் போது, இந்த வேறுபாடு எளிதில் புரியும். அக்குழுவில் பிரதமர், மக்களவையின் தலைவர், மக்களவையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் மற்றும் சட்ட வல்லுநர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். இதன் மூலம் லோக் ஆயுக்தாவின் தலைவர் மற்றும் உறுப்பினர் நியமனங்களில் அதிகாரம், ஆளுங்கட்சியின்பால் செல்வது தவிர்க்கப்படும். நீதித் துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவுக் குழுவில் இடம்பெறுவது, குழுவின் பணியினை மேம்படுத்தும்.



> லோக் ஆயுக்தா சட்ட முன்வடிவை தி.மு.கழகம் எதிர்க்கவில்லை. அது, பல் இல்லாத பொக்கை வாயாக வெட்டப் பயன்படாத அட்டைக் கத்தியாக இருக்கிறது என்பதையும் அந்த ஓட்டை வாய் வழியாக ஊழல் பெருச்சாளிகள் குறுக்கு வழியில் தப்பி ஓடி, நிர்வாக நேர்மை என்ற உன்னதமான உயிருக்கே உலை வைக்கும் என்பதைத்தான் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது.
>
> - எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின்

மேலும், சட்டப் பிரிவு 3(2)(A) இன் படி, லோக் ஆயுக்தாவின் தலைவராக உயர்நீதிமன்ற நீதிபதியையோ அல்லது ஊழல் தடுப்புக் கொள்கை, பொது நிர்வாகம், சட்டம், நிதி, விழிப்புணர்வு உள்ளிட்ட துறைகளில் 25 ஆண்டு அனுபவமிக்க ஒருவரை நியமிக்க முடியும். இது லோக் ஆயுக்தா அமைப்பினை அதிகாரிகள் தலைமையிலான அமைப்பாக மாற்றிவிடக் கூடும்.

அதுமட்டுமன்றி லோக் ஆயுக்தாவின் சட்டப்பிரிவு 13(1) இன் படி அரசு ஒப்பந்தங்களைப் பற்றிய புகார்களையோ, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ளோர் மீதான புகார்களையோ விசாரிக்க முடியாது. சட்டப்பிரிவு 26(2) இன் படி லோக் ஆயுக்தா அமைப்பு, அரசுக்கு வெறும் பரிந்துரைகளை மட்டுமே அளிக்கும் அமைப்பாக இருக்கிறது. அவ்வமைப்பால் ஆணை எதுவும் பிறப்பிக்க முடியாது.

இவைபோன்ற காரணங்களாலேயே தமிழக அரசின் லோக் ஆயுக்தா அமைப்பு, அதிகாரம் அற்ற அமைப்பு என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மேலும் மசோதா நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், சட்டப்பேரவையின் தேர்வுக் குழுவிற்கு (Selection Committee) அனுப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் புறந்தள்ளப்பட்டுள்ளது.

அதிகாரத்தை ஆளுங்கட்சியிடம் குவித்து வைத்துக் கொள்வது ஜனநாயகமாகாது. அதிகாரப் பரவலாக்கமே உண்மையான ஜனநாயகத்திற்கு வித்திடும். லோக் ஆயுக்தா சட்டம், அதிகாரத்தை ஆளுங்கட்சியிடம் முழுவதுமாக ஒப்படைத்துவிட்டு பேருக்கு ஓர் அமைப்பாகச் செயல்படவிருக்கும் அட்டைக்கத்தியே என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


## திருச்சியில் கிழக்கு மண்டலக் கூட்டம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கிழக்கு மண்டலக் கூட்டம் 07.07.2018 சனிக்கிழமை காலை 11 மணி அளவில், தோழர் கார்த்தியின் இல்லம், கீழப்புதூர், திருச்சியில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் துணைப் பொதுச்செயலாளர்கள் தோழர் சிற்பி செல்வராஜ் தலைமையேற்க, தோழர் சிங்கராயர் முன்னிலை வகிக்க, மாநில அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன், கிழக்கு மண்டலத் தலைவர் மணிவண்ணன், திருச்சி மாவட்டத் தலைவர் இரா.தீனதயாளு, மாவட்டச் செயலாளர் பழ.செல்வன், மாநில வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளர் பா.கார்த்தி, தஞ்சை மாவட்டச் செயலாளர் பேரா.ஆ.சாமி, புதுச்சேரி மாநில அமைப்பாளர் திராவிடமங்கை, திருச்சி மாநகரத் தலைவர் தினேஷ் பழனி, திருச்சி மாநகரச் செயலாளர் ம.கேசவன், நங்கவரம் ஒன்றியச் செயலாளர் க.செல்வக்கண்ணன், குளித்தலை ஒன்றியச் செயலாளர் செ.பால்ரெங்கன், குளித்தலை ஒன்றியத் தலைவர் ச.சதிஷ், செ.தினேஷ் குமார், ரெங்கராஜன், க.பிரவீன்குமார், ஜெகதீஸ், ச.சஞ்சய், ராஜ்கமல் ஆகியோர் கலந்துகொண்டனர். அந்தநல்லூர் ஒன்றியச் செயலாளராகத் தோழர் க.பிரவீன்குமார் நியமிக்கப்பட்டார்.

இக்கூட்டத்தில், திருப்பராய்த்துறையில் கருத்தரங்கம் நடத்துவதெனவும், ஆகஸ்ட் 12இல் திருச்சியில் "சுபவீ யிடம் பேசுங்கள்" நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.




*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அரோகரா! அரோகரா!

சிலை என்பது ஓர் அடையாளம்.

சிலை வழிபாட்டை ஏற்றுக்கொள்வதில்லை நாம்.

சிலையை வழிபடுபவர்களுக்குக் குறுக்கே போய் நிற்பது நமது வேலையன்று.

சிலையாய் நிற்கும் கடவுளுக்கும், பக்தகோடிகளுக்கும் குறுக்கே நிற்கும் வேலையைச் செய்து கொண்டிருப்பவர்கள் பூசாரிகள், பார்ப்பனர்கள்.

தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் என்று சூத்திரர்களைக் கோயிலுக்குள் கூட விடமாட்டார்கள் இன்றும் வடமாநிலங்களில், சில கோயில்களில்.

அதாவது கோயிலில் இருக்கும் கடவுள் சிலை முழுவதும் பார்ப்பனப் பூசாரிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

சிலையைக் காணோம் என்று லேசாகப் பொசுங்கிக் கொண்டிருந்த கங்கைக் கிளறிவிட்டுவிட்டார் சிலை தடுப்புப் பிரிவு ஐ.ஜி. பொன்.மாணிக்கவேல்.

நேர்மையான அதிகாரி, தோண்டித் துருவுகிறார்.

அரசு அவருக்கு ஒத்துழைப்பைத் தர மறுக்கிறது.

மெதுவாகத் தொல்லை தரவும் செய்கிறது. இதை நீதிமன்றத்திலேயே அவர் சொல்லிவிட்டார்.

சரி! சிலைகள் எங்கே?

சூத்திரர்கள் யாரும் நுழைய முடியாத, பார்ப்பனப் பூசாரிகள் கட்டுப்பாட்டில் இருக்கும் சிலைகள் எங்கே போனது என்பதற்கு முதலில் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

நடராசப் பெருமான் சிலையோ நாட்டை விட்டே கடத்தப்பட்டுவிட்டது. ஒரு வழியாக அது மீட்கப்பட்டுவிட்டது.

பழனியில் பஞ்சலோகப் பழனியாண்டவனையே காணவில்லையாம். எங்கே போனாரோ சுவாமிகள்?

அதையும் கண்டுபிடித்துக் கும்பகோணம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டார் பொன்.மாணிக்கவேல்.

சர்வ வல்லமையுள்ள தெய்வீகக் கடவுளுக்குத் தன்னைக் காத்துக்கொள்ள முடியவில்லை.

தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் தெய்வீகம் நிறைந்த பூசாரிகளுக்கோ அக்கடவுளைக் காப்பாற்றத் தெரியவில்லை.

கடவுளின் மீதே கைவைத்திருக்கிறார்கள் என்றால் அரசுக்கும், அரசு சார்ந்த ஆதரவாளர்களுக்கும் இதில் தொடர்பு இல்லாமல் இருக்க முடியாது.

நேர்மையாகப் புலன் விசாரணை செய்யும் பொன். மாணிக்கவேலுக்கு அரசு உரிய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும்.


சிலை கடத்தல் தொடர்பான அனைத்து செய்திகளும் வெளிவரவேண்டும். குற்றவாளிகள் தப்பிக்கக் கூடாது. கூண்டில் நிறுத்தி அவர்களை அடையாளம் காட்ட வேண்டும்.

இனி, பழனி கோயிலில் மொட்டை போடுவதா; இல்லை, கும்பகோணம் நீதிமன்றத்தில் மொட்டை போடுவதா என்பதை பக்தகோடிகளே முடிவு செய்து கொள்ளட்டும்.

அரோகரா! அரோகரா!



# இந்தியச் சட்ட ஆணையமும் இந்து ராஷ்டிரமும்!



● மா.உதயகுமார்

இந்திய சட்ட ஆணையம் பரிந்துரைத்திருக்கும் ஒரே தேசம் ஒரே தேர்தல் முறை நடைமுறைச் சாத்தியமற்றதோடு அரசியலமைப்பிற்கும் கூட்டாட்சித் தத்துவத்திற்கும் எதிரானது என்பதை விளங்கிக் கொள்ளப் பெரிய சட்ட ஆராய்ச்சி எல்லாம் தேவையில்லை. எளிய மக்கள் கூட மிக எளிமையாக விளங்கிக் கொள்ளக்கூடிய ஒன்று தான் இது. நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப் பட்டால் பல கோடிகள் அரசுக்கு மிச்சமாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

### மிக இயல்பாக எழுப்பப்படும் கேள்விகள்:

- 2019 நாடாளுமன்றத் தேர்தலின்போது இது நடைமுறைப்படுத்தப்பட்டால் 2015இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிஹார் சட்டப் பேரவை முதல், கடந்த மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட கர்நாடக சட்டப்பேரவை மற்றும் இந்த ஆண்டு கடைசியில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ராஜஸ்தான், மத்தியபிரதேசம், சத்தீஸ்கர் போன்ற மாநில சட்டசபைகள் ஐந்தாண்டுகளை நிறைவு செய்வதற்கு முன்னரே கலைக்கப்படுமா?
- ஆட்சியமைக்கத் தேவைப்படும் பெரும்பான்மை இடங்கள் கிடைக்காமல் தொங்கு சட்டசபை ஏற்பட்டு எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்படும் போது மீண்டும் தேர்தல் நடத்தப்படுமா?
- தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் ஓரிரு ஆண்டுகளில் கட்சிப் பிளவு, கட்சித்தாவல், அணி மாற்றங்கள் போன்ற காரணங்களால் கலைக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் ஐந்து வருடங்களில் மீதமுள்ள காலத்தில் மத்திய அரசே ஆட்சிப் பொறுப்பை ஆளுநர் மூலம் ஏற்றுக் கொள்வது ஜனநாயகத்திற்ககு எதிரானதாகாதா?
- மாநிலத்தில் ஒரு ஆட்சி கவிழ்ந்தாலோ அல்லது பிற காரணங்களுக்காக சட்டசபை கலைக்கப்பட்டாலோ, மத்திய அரசு நேரடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் மத்தியில் ஆளும் அரசே ஒருவேளை கவிழ நேர்ந்தால்? மாநிலங்களில் ஆளுநர் ஆட்சி போல மத்தியில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு அரசியல் சட்டத்தில் இடமில்லை. அதனால் மீண்டும் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடத்த வேண்டும். அப்போது மீண்டும் எல்லா மாநில சட்டசபைகளும் கலைக்கப்படுமா?
- அமெரிக்கா போல, மக்கள் நேரடியாகத் தங்களை ஆளுபவரைத் தேர்ந்தெடுக்கும் அதிபர் முறைக்கு மாறினால் மட்டுமே இம்முறை சாத்தியப்படும். அப்படி அதிபர் ஆட்சி முறைக்கு மாற அரசியலமைப்பு திருத்தப்படுமா?

இந்த நிலைகள் ஏற்பட வேண்டும், அதிகாரம் என்பது நூற்றுக்கு மூன்று சத விகிதம் மட்டுமே இருக்கும் ஒருசிலரிடமே இருக்க வேண்டும் என்பது தான் இன்றைய மத்திய அரசின் நிலைப்பாடு.

### குறையுமா செலவு?

ஜனநாயகத்திற்கு எதிரான பல திட்டங்களைப் பொருளாதாரத்தை முன்னிறுத்தியே மத்திய அரசு முன்மொழிகிறது. அப்படி ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்படுவதன் மூலம் செலவு குறைக்கப்படும் என்பதே காரணமாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் பணத்தை மிச்சப்படுத்தும் பொருட்டு எதை வேண்டுமானாலும் இந்நாட்டு மக்கள் இழக்க வேண்டுமா? இது ஒருபுறம் இருக்க செலவு குறைக்கப்படும் என்பதாவது சாத்தியமா என்று பார்த்தால் அதற்கும் பல்வேறு தரப்பினரும் வேறு வேறான விடையையே தருகின்றனர்.

ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடத்தினால் இந்தியக் கூட்டாட்சிக் கட்டமைப்பு அழிந்துவிடும் என்று சட்ட ஆணையத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரான திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், “2014 இல் பொது தேர்தல் நடத்த மத்திய அரசு 3870 கோடி செலவு செய்தது. அதாவது ஒரு வாக்காளருக்கு செய்த செலவு ரூ.45 ஆகும். அவ்வாறிருக்கையில் இது எப்படி பெரிய தொகை செலவிட்டது போன்றதாகும் என்பது புரியவில்லை.” என்று சுட்டிக்காட்டியுள்ளார். ஆக செலவு குறைக்கப்படும் என்பதும் மக்களிடம் ஒரு பொதுப்புத்தியைக் கட்டியமைத்து அதன் மூலம் மக்கள் ஆதரவைப் பெறும் நோக்கோடு சொல்லப்படுவதாகவே இருக்கிறது.

### இந்து ராஷ்டிரக் கனவு:

2019 இல் இந்தியாவை “இந்து ராஷ்டிரமாக” அறிவிக்கும் இலக்கோடு செயல்படும் RSS இன் செயல் திட்டங்களில் இதுவும் ஒன்று. அதிகாரத்தை ஒரே மய்யத்தில் குவிப்பது, அங்கிருந்துகொண்டு அதிகாரத்தைச் செலுத்துவது இதுவே மத்திய அரசின் வாடிக்கை. ‘Central Government is a legal fiction’ என்று பொதுவாகச் சொல்லப்படுவது உண்டு. அதாவது கூட்டாட்சி முறையில் மத்திய அரசு என்று ஒன்று இருப்பது சட்டப்பூர்வமான கற்பனையே ஆகும். அதை மாற்றி அதிகாரங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டு பல்வேறு பண்பாடு, பல்வேறு கலாச்சார வாழ்வியலைக் கொண்ட மக்கள் வாழும் இந்தியத் துணைக்கண்டத்தில் மாநில சுயாட்சியை ஒழித்து ‘State Government is a legal fiction’ என்று சொல்லும் அளவிற்கு நிலைமையை மாற்ற முயற்சிக்கிறது மத்திய பா.ஜ.க. அரசு.

இப்படித் தொடர்ந்து பன்மைத்துவத்தை அழிக்க முயற்சிக்கும் பா.ஜ.க அரசிற்கு இந்தியாவின் அனைத்து மாநில மக்களும் பாடம் புகட்ட வேண்டும். மாநிலக் கட்சிகள் ஆட்சியிலிருக்கும் மாநிலங்களின் வளர்ச்சியையும் தேசியக் கட்சிகள் ஆட்சியிலிருக்கும் மாநிலங்களின் வளர்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்து மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

பள்ளி மாணவர்களைப் பொதுத் தேர்வு, மருத்துவத்திற்கு ஒரு நுழைவுத் தேர்வு, பொறியியலுக்கு ஒரு நுழைவுத் தேர்வு என ஒவ்வொரு துறைக்கும் ஒரு நுழைவுத் தேர்வு என்பதோடு தற்போது ஆண்டிற்கு இரண்டு முறை NEET என்கிற வரைக்கும் வாட்டி வதைக்கும் மத்திய அரசு தேர்தலை மட்டும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என்று சட்ட ஆணையத்தின் மூலம் கேட்பதன் நோக்கமெல்லாம் எல்லா இடங்களிலும் ‘மத்தவா வராம பாத்துக்கனும்’ என்பது தான். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.